**வரையறுக்கப்பட்ட டிஸ்ரன்ஸ் லேர்னிங் சென்டர - 2019**

வரையறுக்கப்பட்ட டிஸ்ரன்ஸ் லேர்னிங் சென்டரின் (''கம்பனி'') 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாடுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும். பிரிவு 16(2) இன் பிரகாரம் ஒவ்வொரு கணக்காய்வு நிறுவனத்திற்குமான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், பிரதான கணக்கீட்டு அலுவலரால் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு விதிகளினால் வழங்கப்படுகின்ற காலத்திற்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். உபபிரிவு 38(1)(ஈ) இன் பிரகாரம் வருடாந்த மற்றும் நிதிக்கூற்றுக்களை சரியான நேரத்தில் சமர்ப்பிப்பதை உறுதி செய்வதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு நிறுவனம் தொடர்பாக வருடாந்த அறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் பிரதான கணக்கீட்டு அலுவலர் வேண்டப்படுகின்றார்.

## 2. ஏனைய சட்ட மற்றும் பிரமாணங்களின் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் என்பன பின்வரும் தேவைப்பாடுகளுக்கான குறிப்பிட்ட ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஐந்தொகைத் திகதியின் ஆறு மாதத்திற்குள் நிதிக்கூற்றுக்கள் அவற்றின் தயாரிப்பிற்கு பொறுப்பான நபரினால் சான்றுறுதிப்படுத்தப்படுவதை கம்பனியின் பணிப்பாளர் சபை உறுதி செய்ய வேண்டும்.

## 2.1 நிதிக் கூற்றுக்கள்

### 2.1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இந்த அறிக்கைத் | அமைச்சின் பரிந்துரைக்கப்பட்ட பிரதிநிதிகளை சபைக்கு நியமிக்குமாறு வரிசை | நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க |

| | | |
|---|---|---|
| திகதி வரையில் சமர்ப்பிக்கப்படவில்லை. | அமைச்சானது பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு (PED) அறிவித்துள்ளமையால் DLC இன் பணிப்பாளர் சபையால் இன்னும் இறுதி முடிவு செய்யப்படவில்லை. எனவே புதிய சபை சந்திக்கும் வரையில் 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட முடியாது. இருந்த போதிலும், DLC ஏற்கனவே 2019 ஆம் ஆண்டிற்கான வரைவு நிதிக்கூற்றுக்களை சட்டரீதியான திகதியான 2020 பெப்ரவரி 28 இற்கு முன்னராக வரிசை அமைச்சு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்திருந்தது. | வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் இத்தலைப்பின் கீழ் காட்டப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.3 ஆம் பிரிவு | தேவையான அங்கீகாரம் இல்லாது பல ஊக்கத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் ஊக்கத் தொகையாக ரூபா 632,539 ஆனது கம்பனியால் செலுத்தப்பட்டிருந்தது. | சனவரி 2019 இலிருந்து சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இலக்கு அடிப்படையிலான விற்பனை ஊக்கத் தொகை (TBSI) தவிர வேறு பல ஊக்கத் திட்டங்களை DLC கொண்டிருக்கவில்லை.<br><br>கம்பனி அகவிதியின் பிரகாரம் ஊதியம் மற்றும் கொடுப்பனவுகளை அவை பொருத்தமானவை எனக் கருதப்படின் அவற்றை ஊழியர்களுக்கு | தேவையான அங்கீகாரங்கள் பெறப்பட்ட பின்னரே ஊக்கத் தொகை செலுத்தப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கொடுப்பனவு செய்வதற்கான துணை அதிகாரங்களை DLC கொண்டுள்ளது. (கம்பனி அகவிதியின் 12 ஆம் பிரிவு) DLC சபை மட்டத்தில் கண்காணித்து வருவதுடன் இத் தேவைப்பாடுகளுக்கு இணங்கியதாக உள்ளது. | |
| (ii) | 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ/2015/01 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு | பிரதான நிறைவேற்று அலுவலகருக்கு (CEO) அங்கீகரிக்கப்பட்ட மாதாந்த அதிகபட்ச எரிபொருள் எல்லையின் அளவு 150 லீட்டர் ஆகும். இருப்பினும் கம்பனி 2013 ஆம் ஆண்டிலிருந்து அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளை மீறி தலைமை நிறைவேற்று அலுவலகருக்கு 193 லீட்டர் எரிபொருளை மாதாந்த எரிபொருள் கொடுப்பனவாக வழங்கியிருந்தது. அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மீளாய்வாண்டின் போது ரூபா 60,000 பெறுமதியான எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது. | பிரதான நிறைவேற்று அலுவலரின் நியமனக் கடிதத்தில் எரிபொருள் கொடுப்பனவு மற்றும் வாகன வாடகை என்பவை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நியமனக் கடிதம் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த துடன் இது கம்பனிக்ளுக்குப் பரிந்துரைக்கப்பட்டதன் பிரகாரம் கடைகள் மற்றும் அலுவலகச் சட் டத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்தது. எனவே, நியமனக் கடிதமானது ஒரு சட்டபூர்வ ஆவணம் ஆகையால் மேற்கூறிய அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளை நாம் தொடர்ந்தும் வழங்கி வருகின்றோம். | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் எரிபொருள் கொடுப்பனவுகள் வழங்கப்படல் வேண்டும். |

## 2.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் குறைந்த பட்சம் 3 வருட காலத்திற்குத் திட்டமிடப்பட்ட பெறுகை | DLC இனால் பிரதான பெறுகைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். 2021 ஆம் ஆண்டில் இதை நாம் நடைமுறைப்படுத்துவோம். | சுற்றறிக்கையில் குறிப்பிட்டவாறு பிரதான பெறுகைத் திட்டம் தயாரிப்பதற்கான |

| | | |
|---|---|---|
| நடவடிக்கைகளைக் குறிக்கும் பெறுகைத் திட்டம் (MPP) நிறுவனத்தினால் தயாரிக்கப்படவில்லை. | | நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.4 அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 மே 15 ஆந் திகதிய MF 01/2015/01 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கைக்கு முரணாக | | |
| (i) 2019 மார்ச் 26 ஆந் திகதியிலிருந்து மார்ச் 28 ஆந் திகதி வரையில் பெய்ஜிங் சீனாவில் நடைபெற்ற GDLN ஆசிய பசுபிக் பிராந்திய கூட்டத்திற்குச் சமூகமளித்த இரு அதிகாரிகளின் வெளிநாட்டுப் பயணத்திற்குத் தேவையான அங்கீகாரம் பெறப்படாமல் ரூபா 85,540 ஆன மேலதிகத் தொகை வழங்கப்பட்டிருந்தது. | 188 ஆவது சபைக் கூட்டத்தின் போது குறிப்புக்களின் பிரகாரம் சீனாவின் பெய்ஜிங்கில் நடைபெறும் ஆசிய பசுபிக் பிராந்தியக் கூட்டமான உலகளாவிய அபிவிருத்திக்கு கற்றல் வலையமைப்பில் பங்கேற்பதற்காக 4 நாட்களுக்கான செலவுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், விமானச் சீட்டின் பிரகாரம் மொத்த நாட்கள் 06 ஆகும். (மார்ச் 25 முதல் மார்ச் 30 வரை) எனவே பிரதான நிறைவேற்று அலுவலகர், தலைவர் மற்றும் பணிப்பாளர் சபைக்கு 5 நாட்கள் தங்குமிடம் மற்றும் 6 நாட்களுக்கான உதவித் தொகைகளை வழங்குவதற்கு சபையின் அனுமதியைக் கோரி கடிதம் எழுதினார். இருப்பினும், இது குறிப்புக்களில் உள்ளடக்கப்படாததுடன் அடுத்த சபைக் கூட்டத்தில் புதிய பணிப்பாளர் சபையினால் சரி செய்யப்படும். | வெளிநாட்டுப் பயணத்திற்காக தேவையான அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |
| (ii) பிரதான நிறைவேற்று அலுவலர் சியோல் கொரியாவில் 2019 செப்டம்பர் 2-3 வரை நடைபெற்ற GDLN உலகளாவிய சபைக் கூட்டத்தில் பங்குபற்றினார். KDI | GDLN அழைப்பிதழ் கடிதத்தில் இஞ்சியன் விமான நிலையத்திற்கும் மற்றும் விமான நிலையத்திலிருந்து ஹோட்டலுக்கான போக்குவரத்துக் கொடுப்பனவைக் குறிக்கின்றது. இருப்பினும், இது பொதுப்போக்குவரத்திற்கு மட்டுமே ஆகும். விமான நிலைய டாக்ஸி | தேவையற்ற கொடுப்பனவுகளை தவிர்ப்பதற்கு கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| பாடசாலையினால் போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், (அழைப்புக் கடிதத்தின் படி) ரூபா 24,900 ஆனது இஞ்சியன் விமான நிலையத்திலிருந்து ஹோட்டலுக்கான போக்குவரத்துக்காக செலுத்தப்பட்டிருந்தது. | சேவையைப் பயன்படுத்தும் போது ஹோட்டலில் இருந்து விமான நிலையத்திற்கும் மற்றும் விமான நிலையத்திலிருந்து ஹோட்டலுக்கு செல்வதற்கான மொத்தச் செலவுகளை ஏற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. எனவே ரூபா 24,900 இஞ்சியன் விமான நிலையத்திலிருந்து ஹோட்டலுக்கும் மற்றும் திரும்பும் பயணத்திற்காகவும் செலுத்தப்பட்டிருந்தது. |

## 2.5 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2(அ) பிரிவின் பிரகாரம் நிறுவனக் கட்டமைப்பு மற்றும் பதவியணியினர் என்பன திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட வேண்டும். இருப்பினும், இத்தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்வதற்கு கம்பனி தவறிவிட்டது. | பதவியணியினர் நிலைமை மற்றும் நிறுவனக் கட்டமைப்பு மற்றும் ஏனைய விபரங்களைச் சமர்ப்பிக்குமாறு வரிசை அமைச்சின் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் DLC இடம் கோரியிருந்ததுடன் அதன் பிரகாரம் DLC அதன் பதவியணியினர் நிலைமை, நிறுவனக் கட்டமைப்பு, நியமனக் கடிதங்கள் மற்றும் ஏனைய விபரங்களை 2019 ஒக்டோபர் 08 ஆந் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு மற்றும் அதன் பிரதியை பொது முயற்சிகள் திணைக்களத்திற்கும் அனுப்பியிருந்தது. இந்த ஆவணங்கள் குறித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து மேலதிக பதில் எதுவும் கிடைக்கவில்லை. எனவே மேற்கூறப்பட்ட விடயங்களை விரிவாக விவாதிப்பதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்து எமக்கு உதவுமாறு வரிசை அமைச்சிடம் கோரப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை கம்பனி கடைப்பிடிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு பொது நிறுவனத்திற்கும் ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் பதவி உயர்வுத் திட்டம் என்பன இருக்க வேண்டிய போதிலும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் பதவி உயர்வுத் திட்டம் என்பவற்றை கம்பனி கொண்டிருக்கவில்லை. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடனான ஆரம்ப கட்ட சந்திப்புக்கள் அமைச்சினால் 2017 நவம்பர் 29 ஆந் திகதி அன்று முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. இருப்பினும், மேற்கூறிய சந்திப்பின் வெளிபாடுகள் மீதான எதுவித பதில் கடிதங்களையும் DLC பெற்றுக் கொள்ளவில்லை. எனவே கடந்த மூன்றாண்டுகளாக காலத்துக்குக் காலம் இவ்விடயம் தொடர்பாக நாம் வரிசை அமைச்சின் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு எழுதினோம். DLC இனால் அனுப்பப்பட்ட வரைவு ஆட்சேர்ப்புத் திட்டம், பதவியணியினர் நிலைமை என்பன பொது முயற்சிகள் திணைக்களத்தினால் 29/05/2019 அன்று முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு இறுதியாகச் சென்ற போது 2017 நவம்பர் 29 ஆந் திகதியன்று மேற்கூறப்பட்ட கூட்டத்தைக் குறிப்பிட்டுள்ளதென எமக்குத் தெரிவிக்கப்பட்டது. அக்கடிதத்தில் கூறப்படுவதாவது DLC ஆனது கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பனி என்பதனால் ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் பதவியணியினர் என்பன முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட வேண்டிய தேவைப்பாடு இல்லை என்பதாகும். (கடித இலக்கம் DMS/DLC/T 12.12.2017 ஆம் திகதியிடப்பட்டது) | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை கம்பனி கடைப்பிடிக்க வேண்டும். |